www.padippakam.com

# கோசல்யா கவிதைகள்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கோசல்யா கவிதைகள்

கோசல்யா சொர்ணலிங்கம்

நூல்

படிப்பகம்

www.padippakam.com

KOSALYA KAVITHAIKAL

(A Collection of Poems)

Author: Kosalya Sornalingam

© S.Sornalingam
Leineweberstr.6
4330 Mühlheim/Ruhr
Germany

*Published:*
*NOOL*
*Nadarajah Sussindran Straube*
*Brunsbütteler Damm 21*
*1000 Berlin 20*
*Cover design: K.K.Rajah.*
*Winter 1992/93*

படிப்பகம்

www.padippakam.com

# படையல்

காலமெல்லாம் கல்வியை கற்பித்தலிலும்,கற்பதிலும் பொதுப்பணிகளிலும் தம்மை இணைத்து வாழ்ந்து கல்லூரியிலேயே மரணித்த எனது அப்பா என்.என் கந்தையா(அதிபர்,*J.P*)அவர்களுக்கும்

எனது அண்ணர் என்.கே.தர்மலிங்கம்(*M.A,Dip. in Ed.*,அதிபர்) அவர்களுக்கும்

இதுபோன்று என் மண்ணில் மறைந்துபோன மக்களுக்கும்

ஒன்பது திங்கள் உபாதைகளால் என்னை உலகுக்களித்து "தலைவாரிப் பூச்சூடி என்னைப் பாடசாலைக்குப் போ..." என்று சொன்ன என் அன்னை லட்சுமிக்கும்,

விடியல் ஒன்று வேண்டும் என்று அதுபெண்ணுக்கும் மண்ணுக்கும் ஆக தம்மை அதில் இணைத்துக் கொண்ட தோழிகள் தோழர்களுக்கும்

இது படையலாகிறது.



படிப்பகம்

# அன்னையின் ஆசியுடன்.......

"கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்பது ஆன்றோர் வாக்கு.

தமிழுணர்வும், சமாதான நோக்கும்,குருபக்தியும் கொண்டு விளங்கும் திருமதி கோசல்யா சொர்ணலிங்கம் அவர்கள் தமது வாழ்க்கையில் தமிழன்னைக்குத் தொண்டுசெய்த தனது தந்தை;தனது அண்ணாவின் கவிதைகளை முன்வைத்து அவர்கள் மறைந்தாலும் அந்த இடத்தை நிரப்ப வந்ததையிட்டு மகிழ்வோடு அவர் கவிதைகளைப் பாராட்டுகிறேன்.கலைமகள் கடாட்சம் பெற்று, தனது வாழ்க்கையில் தமிழன்னைக்கும் கல்வி அன்னைக்கும் தொண்டு செய்து வாழ இறைவி அருள் புரிவாராக.

தனக்கென்று நாடின்றி தமிழன் போராடும் இந் நெருக்கடியான நேரத்தில் தமிழும் தமிழர் கலாசாரமும் தொடர்ந்து காப்பாற்றப்பட திருமதி கோசல்யா சொர்ணலிங்கம் அவர்களின் கவிதைகளுக்கு வாழ்த்துரை கூறுவதில் பெருமைப்படுகின்றேன்.திரு நா.கந்தையா அவர்களும் தலைமகன் திரு க.தர்மலிங்கம் அவர்களும் காட்டிய பாதையில் தமிழுக்குத் தொடர்ந்து தமிழ்ப் பாமாலை சூட வாழ்த்துகிறேன்.

அன்னை
இலட்சுமி கந்தையா

அவுஸ்திரேலியா

www.padippakam.com

# கோசல்யா கவிதைகள்

மனதில் எழும் உணர்வுகளையும் கருத்துக்களையும் ஆற்றலுடன் வெளிப்படுத்துவதற்குச் சொற்சுருக்கத்தையும் பொருட்செறிவையும் அடிப்படைப் பண்பாகக் கொண்ட கவிதை மிகச் சிறந்த ஊடகமாகும்.தீப்பொறி போன்ற அதன் வார்த்தைகளுக்கு அதனைப் படிப்பவர் நெஞ்சில் தீப்பற்றியெழ வைக்கும் ஆற்றல் உண்டு.சில விதிமுறைகளுக்கமைய அமையும் சில வார்த்தைகளுக்கு மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை இருப்பதனாற்றான் கவிதை என்ற அமைப்பு அழியா வரத்தைப் பெற்று வாழ்கிறது.மரபு வழிக் கவிதையிலிருந்து புதுக்கவிதை வரை நீண்ட வரலாறு கண்ட தமிழ்க் கவிதை காலம் காலமாகத் தமிழர்களுக்குப் பல்வேறு கருத்துக்களால் உணர்வூட்டி அறிவூட்டி வந்துள்ளது. எளிமையான காதலிலிருந்து சிக்கலான தத்தும் வரை நாட்டுப்பற்றிலிருந்து தனிமனிதப் பிரச்சினை வரை தமிழ்க் கவிதை தொடாத விடயமே இல்லை எனலாம்.

தமிழ்க் கவிதை,மரபு வழிச் செய்யுளின் ஆக்கத்திலிருந்து விடுபட்டுப் புதுக் கவிதையாக வளர ஆரம்பித்ததிலிருந்து சொற்களைச் சுருக்கமாகக் கையாளும் வித்தை கைவந்த, கற்பனை வளமுள்ள பலர் தமது கருத்துக்களைத் தெரிவிக்கக் கவிதையைக் கருவியாகத் தெரிந்தெடுத்தனர்.இதனால் பெருந்தொகையான கவிஞர்கள் அறிமுகமானார்கள்,முன்னணிக்கு வந்தார்கள்.ஈழத்தமிழரது நாட்டுப்பிரச்சினையும் போராட்டமும் அவற்றின் பக்கவிளைவாகிய புலப்பெயர்வும் தமிழ்க்கவிதைப் பொருளாயின.தமிழர்களுக்கேயுரிய சில பிரச்சினைகள்,உலகத்திற்குப் பொதுவான சிலவிடயங்கள் என்பன முன்னெப்போதும் இல்லாதவகையிற் கவிதைக்கூடாகச் சீறிப்பாய்ந்து அவற்றிற்குப் பரிகாரம் தேட முயன்றன.

வெளிநாடுகளுக்குச் சிறப்பாக மேலை நாடுகளுக்கு இடம்பெயர்ந்த தமிழர்கள் சந்தித்த புதிய பிரச்சினைகள் தமிழ்க் கவிதையில்



படிப்பகம்

ஒரு புதிய பரிணாமத்தை உருவாக்கின. உடலைத் துளைக்கும் கடுங்குளிர்;வெள்ளைத் தோலுடையோர் மத்தியில் வாழ நேரிட்டதால் ஏற்பட்ட நிறம் பற்றிய மனத்தாக்கம்; அகதிகளாக அந்நியர் மத்தியில் வாழ நேர்ந்ததால் உருவான மனச்சஞ்சலம்;வேலையற்ற அல்லது தரந்தாழ்ந்த வேலைகள் செய்ய நேர்ந்த துயரம்;உற்றார் உறவினர் நண்பரைப் பிரிந்து வாழும் துன்பம்;அவர்களது பாதுகாப்புக் குறித்த தவிப்பு;தாய்நாட்டை விட்டு வந்த குற்றவுணர்வு என்பன வெளிநாட்டில் வாழும் தமிழ்க் கவிஞர்களின் கவிதைப் பொருளாயின.அந்தப் புதிய மனத்தாக்கம் பல புதிய கவிஞர்களை உருவாக்கித் தமிழர்களுக்கு இனங்காட்டியது.திருமதி கோசல்யா சொர்ணலிங்கம் அந்த வகையில் உருவான ஒரு பெண்கவிஞர் என்பதற்கு அவரது கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகள் சாட்சியாக அமைகின்றன.தாய்நாட்டுப் பிரச்சினையும் பெண்கள் எதிர் நோக்கும் பல அடிப்படைப் பிரச்சனைகளும் அவரது சிந்தனையைத் தூண்டியுள்ளமை அவர் தெரிவு செய்துள்ள கவிதைப் பொருளிலிருந்து தெரியவருகிறது.

திருமதி கோசல்யாவுடன் எனக்கு நீண்ட காலப் பழக்கமுண்டு.மிக இளம் வயதிலேயே கவிதை எழுத வேண்டும் என்ற துடிப்பு அவரது உள்ளத்தை ஆட்கொண்டு விட்டதை நானறிவேன்.தனது தளராத முயற்சியினால் முன்னணிக் கவிஞர் வரிசைக்கு அவர் வந்துகொண்டிருப்பதை இத் தொகுதியிலுள்ள பல கவிதைகள் கட்டியங் கூறி நின்றன. அவரிடம் கவிதை புனையும் ஆற்றலும் கற்பனை வளமும் நிறைந்துள்ளன. "அவளில்லா அர்த்தங்கள்","திருத்த","வஞ்சகத்தீ","அகதி வந்த பாதை" போன்ற கவிதைகள் அவரது கவிதா ஆற்றலுக்கும்,கற்பனாசக்திக்கும் சான்றாக நிற்கின்றன.பெண் விடுதலையில் அதிக நாட்டம் கொண்ட கோசல்யா கவிதை என்ற ஆற்றல் மிகுந்த சாதனம் மூலம் பல அற்புதங்களைச் சாதிக்க முடியும்.அவர் ஏற்கனவே இந்த முயற்சியில் இறங்கியிருப்பது இத் தொகுதியிலுள்ள பல கவிதைகளிலிருந்து தெரியவருகிறது.பெண்களின் கைகளில் பூட்டப்பட்டுள்ள விலங்குகள், "உன்னிடத்தில்தோழி..."என்ற தனது கவிதையில் கோசல்யா

www.padippakam.com

கூறுவதைப்போல அவர்களே பூட்டியவையாகவும் இருக்கலாம் அல்லது சமுதாயம் பூட்டியவையாகவும் இருக்கலாம்.அவற்றை உடைப்பதற்கு ஈட்டி போன்ற கூரிய சொற்கள் அதிக பலம் வாய்ந்தனவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.இத்துறையில் நாட்டம் கொண்ட கோசல்யா போன்ற பெண்கள் ஆற்றல் வாய்ந்த கவிதை என்ற சாதனம் மூலம் அதிகம் பங்களிக்க முடியும்.சொற்களை மேலும் மேலும் கூர்மையாக்க மிகுந்த பயிற்சி அவசியம்.கூர்மை அதிகரிக்க அதிகரிக்க கவிதையில் கூறப்படும் கருத்து உரியவர் மனதில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தும். சொற் பற்றாக்குறை அல்லது மிகப்பொருத்தமான சொல்லை உரிய இடத்திற் பயன்படுத்தாமை சில இடங்களில் கோசல்யாவின் கவிதை ஓட்டத்தைத் தடைசெய்கின்றன.அக்குறைபாட்டை நிவர்த்திக்கும் பொழுது அவரது கவிதைகள் மேலும் ஆற்றலும் அழகும் மெருகும் பெறும்.

கோசல்யா கவிதைத்துறையில் மேலும் மேலும் பல வெற்றிகளைப் பெற்றுத் தனது கவிதைகள் மூலம் சாதனை படைக்க எனது மனப்பூர்வமான ஆசிகள்.

சந்திரலேகா வாமதேவன் *B.A.(Hons),M.A.*

தலகொட் பாதை-8ஏ.
74143கனிவ்ஸ்டா.
சுவீடன்.



படிப்பகம்

# இது எமதுகுரல்....

எனது இனிய தோழியும்,ஜேர்மன் பெண்கள் சந்திப்பு நிகழ்வுகளில் பெரும்பங்காற்றி வருபவருமான கோசல்யாவின் கவிதைத்தொகுப்பு வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.இத்தொகுப்பில் பெண்களின் நிலைபற்றி எழுதப்பட்டுள்ள கவிதைகள் பெரும்பாலும் நமதுகுரல் சஞ்சிகையில் வெளிவந்தவை என்ற ரீதியில் சிலவரிகள்:

வாழ்வின் மதிப்பீடுகள் வேகமாக மாறிவருகின்ற இவ்வேளையிலும் பெண்களின் நிலை ஒன்றும் பெரிதாக மாறிவிடவில்லை என்றே கூறவேண்டும்.பெண் வீட்டுக்குரியவள்;அவளுக்கென்றுதனிப்பட்ட சிந்தனை செயற்பாடுகள் இருப்பது தவறு என்ற கருத்துக்களே இன்னும் எம்மவர் மத்தியில் நிலவுகின்றன. இந்நிலையில் பெண் படைப்பாளிகள் பலர் இங்கு எம்மத்தியில் எழுதிவருகிறார்கள்.தமது உணர்வுகளை இவர்கள் எழுத்தில் வடிக்கும் போது சமூகம் இவர்களை அச்சத்தோடு பார்க்கிறது.தமது ஆர்வத்துக்கேற்ற துறைகளில் அவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதை அங்கீகரிக்கப் பயப்படுகிறது. "எழுத்தறிவு தனியே வீட்டுக்கணக்கும் சலவைக்கணக்கும் எழுதப்பயன்பட்டால் போதாதா? கவிதையும், கட்டுரையும் இவர்களுக்கு எதற்கு" என்று ஒத்துழைப்புக்கொடுக்க மறுத்து,தவறான பிரச்சாரங்களிலும்,சேறடிப்புக்களிலும் ஈடுபட்டு வருகிறது. நாம் ஒன்று கூடி இயங்கும்போது இவற்றினை அனுபவபூர்வமாகவே கண்டு வந்துள்ளோம்.

"எமது பெண்கள் இங்கு ஆடித்திரிகிறார்கள்"என்ற வார்த்தைப்பிரயோகம் குறித்து எமக்குள் நடந்த சம்பாஷனையையே கோசல்யா தனது "ஆடலின் அர்த்தங்கள்" கவிதையில்

பிரளயம் கண்டு...
இருப்பது விடுத்து
நகரத் தொடங்கினோம்!

www.padippakam.com

ஆடித்திரிவதாய்.....ஆடியேதிரிவாய்
உயர் திணை உரைக்க

என்ற வரிகளில் அழகாக வடித்துள்ளார்.அசைவற்றிருக்க நாமென்ன அஃறிணைப் பொருளா என்று அவர்களை நோக்கி கேள்வியும் எழுப்பி

"ஆடியும் கவிபாடியும்
கற்பதென்றாலும்
அதுவும்செய்வோம்"

என்று ஆணித்தரமாக எமது இலக்கினை நாம் அடையும் உறுதி கொண்டுள்ளதை வெளிப்படுத்துகிறார். இன்னும் "வஞ்சகத்தீ" கவிதையில் மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொழுத்தும்படி பாரதிபாட, மாதினைக்கொழுத்தும் மடமையங்கே நடப்பதை சுட்டிக்காட்டுகின்றார். பெண்களின் பிரச்சனைகளைப்பற்றி அக்கறைபடுவதுடன் மட்டும் நின்றுவிடவில்லை.இந்த அகதிவாழ்வில் நாம் தொலைத்து விட்டவை எத்தனையோ? அதில் ஒன்று மனிதநேயம் என்றும் சுட்டிக்காட்டுகிறார்.பல்வேறு கூறுகளாய்ப் பிளவுபட்டு,வேறுபாடுகளையே பற்றிப்பிடித்து வாழ்ந்துவரும் எம்மவர் மத்தியில் நட்பு,அன்பு புரிந்துணர்வைத் தேடும் குரலாய் இவர் கவிதைகள் ஒலிக்கின்றன. அவர் எழுதிய கவிதைகளில் இத்தொகுப்பில் இடம் பெற்றவை சிலதே.

எமது சமூகத்தின் பிரச்சனைகளையும்,மக்களையும் தன்னகத்தே கொண்டுள்ள புகலிட இலக்கிய படைப்பில் ஒன்றாய் இத்தொகுப்பு விளங்குவது மனதுக்கு நிறைவைத்தருகிறது.தொடர்ந்து அவர் நிறைய எதுதவேண்டும்.இன்னும் விரிந்த நோக்கில் அவரது படைப்புக்கள் வெளிவரவேண்டும் என்ற ஆர்வத்துடனும்,வாழ்த்துக்களுடனும்

தேவிகா
கேர்ணே பெண்கள் வட்டம்

*Herne,Germany*



படிப்பகம்

www.padippakam.com

# அணிந்துரை

எழுத்தாளராகவும்,விமர்சகராகவும்,நேர்முகவர்ணனையாளராகவும்,தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியராகவும்,பொதுச்சேவையில் ஈடுபாடுடையவராகவும்,கவியரங்குகளில் பங்குபற்றுபவராகவும், ஜேர்மன் ஒபகௌசன்-முல்கைம் நகரங்களில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கான தமிழ் ஒலிபரப்பு நிகழ்ச்சி அறிவிப்பாளர்களில் ஒருவராகவும் சமூகத்துக்கான தனது பங்களிப்பைச் செய்துகொண்டிருப்பவர் இக்கவிதைத் தொகுப்பின் சொந்தக்காரியான திருமதி கோசல்யா சொர்ணலிங்கம்.

சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் சமூகச்சீர்கேடுகள், பிற்போக்குத்தனங்கள்,பெண் அடக்கு முறைக்கு எதிரான சீர்திருத்தக்கருத்துக்கள்,அதன் பாற்பட்ட ஆரோக்கியமான சிந்தனைகள் மக்களைச் சென்றடைவதற்கு பேச்சுக்கள்,கருத்தியல் ரீதியான தர்க்கங்கள்,விவாதங்கள்,எழுத்துக்களே ஊடகங்களாகச் செயல்படுகின்றவெனினும்,எழுத்தே அதிக அளவு சக்தி வாய்ந்த ஊடகமாகக்கருதப்படுகிறது.

அந்தவகையில் சமூகத்தை நோக்கிய தனதுசிந்தனைகளை.கருத்துக்களை தான் வாழுகின்ற சமகாலச் சமூகத்தைச் சென்றடைவதற்கு எழுத்தாற்றலைப் [illegible] கோசல்யா.தாயகத்தை விட்டு புகலிடம் தேடிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்,இந்நாட்டில் எழுத்துத்துறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய பெண்எழுத்தாளர்களில் ஒருவராவார்.

எமது இனத்தில்,சமூகத்துள் பரவி நின்று சமூக வளர்ச்சியில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தி,சமூகப்பின்னடைவுக்கான காரணிகளில் ஒன்றான பெண் அடக்கு முறைக்கு எதிராகத் தனது எழுத்தாற்றலைப் பயன்படுத்தியுள்ளார்.இவரது இக்கவிதைத் தொகுப்பிலுள்ள கவிதைகளில்,அக்கவிதைகளில் காணப்படும் கருத்துக்களில் காம்பீரம் உண்டு.யாசிக்கும் தன்மையோ,சரணடையும் தன்மையோ கிடையாது.பதிலாக உரிமைக்காக நெருப்பாகக் குதிக்கின்ற சொற்



படிப்பகம்

www.padippakam.com

துண்டங்கள் இவரது கவிதைகளில். ஒரு கவிதையிலுள்ள ஒருசில வரிகளைக் குறிப்பிட விரும்புகிறேன். "சீதனம்" என்ற தலைப்பிட்டு மூன்றாவது பந்தியிலுள்ள கவிதை வரிகளில்,

"...
இங்கும்
ஆற்றாத படுங்குளிரில்
அரைவாசிக் கூலியுடன்
ஏற்றாத சுமைகளை
இதயமதில் ஏற்றி
கூற்றாத பொய்யுரைத்து
சாதனையாய் இங்குழைத்து
மாற்றான் ஒருவனுக்கு
மடிப்பிச்சை போடுகிறார்
இதைத் தூற்றாதநாளில்லை
சொல்லாத சேதியில்லை
இங்கும் துணிவுடனே வளர்கிறது. என்று

கூறுகிறார்.

சீதனத்துக்காக உழைப்பவர்களைப்பார்த்து பரிதாபப்படும் இவர், இப்படியெல்லாம் பரிதாபப்பட்டு உழைத்துச் சீதனமாகக் கொடுப்பதை "மடிப்பிச்சைபோடுகிறார்" எனப்பரிகசித்துக் கூறுகிறார். இந்தநாட்டிலும் சீதனம் கொடுப்பதை, அதை வளர்ப்பதை "இங்கும் துணிவுடனே வளர்கிறது" என அழகாகச் சாடுகிறார். இப்படியான பல கவிதைகள் இத்தொகுப்பில் உண்டு. இவரது கவிதைகளில் சலிப்பு இல்லாத கம்பீரம் எப்பொழுதோ அதேபோல் அவர் பேச்சிலும் நடத்தையிலும் உண்டு. எல்லோர் பரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பும், உரிமைகளை மதிக்கும் பண்பும் இவரிடம் [illegible] கவிதைகளில் மண் விடுதலைக்கான கவிதைகள் இத்தொகுப்பில் இல்லாமல் இருப்பது ஏனோ?

ஆ.க.முருகதாசன்

*BROMBERGER STR. 8*
*4200 OBERHAUSEN 11*
*GERMANY*



படிப்பகம்

www.padippakam.com

# என்னுரை

கவிதை எழுதுகிறேன்.கவியரங்கம் செய்கிறேன். இவ்வெழுத்துகளில் நான் நினைக்குமிடத்தை அணுகவேயில்லை என்பது என் எண்ணம்.கவிதைகள் நூலுருவில் வெளிவரவேண்டுமென என் தாய் உட்பட தோழர் தோழிகள் மிக விரும்பினர்.எனது கவிதைகள் பற்றிய தீர்வு உங்களுடையதே. மிக எளிமையாகப் புரிந்து கொள்ளவேண்டுமென்று நான் நினைப்பதால் என் கவிதைகள் எப்படியோ நீண்டதாக அமைந்து விடுகின்றன.இது பற்றிய பேச்சு எம்மத்தி விமர்சகர்களிடையே இன்னும் உள்ளது.

முற்போக்கானவை;புதுமையானவை என ஏற்றுக்கொள்ளும் தன்மையும்,பழமையானவை;பிற்போக்கானவையென நிராகரித்து விடும் தன்மையும் என்னிடமில்லை.எனது முதற்கவிதைகளான "போலி","தீர்ப்பு","சீதனம்" இவற்றை எனது 15வது வயதில் எழுதினேன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மங்கையர் மஞ்சரி" என்ற நிகழ்ச்சி மூலமே எழுத்துலகை அண்டினேன்.அதைத் தொடர்ந்து 9 வருடமாக அந்நிகழ்சிகளுக்கு எழுதிவந்தேன். இந்நிறுவனம் என் வளர்ச்சிக்கு ஊக்கம் தந்தது உண்மை.அவ்வேளைகளில்நான் சம்பாதித்தது நல்ல எழுத்தாளர்களை.இந்த இடத்தில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சந்திரலேகா,பண்டாரவளை கோபாலகிருஷ்ணன் மிகவும் ஊக்கம் தந்தவர்களாகின்றனர்.அன்றைய என்சிறு ஆக்கங்களுக்கு என்வீட்டில் என்னை நேசித்ததுபோல எனது எழுத்துக்களையும் நேசித்தார்கள் எனதுசகோதரிகள்.தமதுசக ஆசிரியர்களோடும் ,சகஊழியர்களோடும் என்கவிதைகளை காவிச்சென்று விமர்சனங்கள் கொண்டு வந்து எனக்கு மிக ஊக்கம் தந்தனர்.

தாய் மண்ணில் வாழுகையில் மண்ணின் நெருக்கடியால் புலம் பெயர்ந்து ஜேர்மனிக்கு வந்தபோது 10 வருடங்களாக



படிப்பகம்

எழுதிய என் கவிதைகளை தொலைத்தவனாக வந்தேன்.இது எனக்கு ஏற்பட்ட துன்ப சேதிகளாகும்.இந்நூலுருக் கொண்ட கவிதைகள் ஜேர்மனியில் நான் புகலியான பின் எழுதியவையே.

நான் நெடுந்தீவில் பிறந்தவன். பின்னால் யாழ் சுண்டிக்குளியில் வளர்வானவன்.எனது தந்தையார் நெடுந்தீவில் அதிபராக இருந்த காலத்தில் சிறுமியாக நான் வாழ்ந்த வாழ்வு இன்னும் என்னுள் மலர்ச்சியைத் தரும்.என் கிராமம் பற்றிய சுகமான நினைவுகளுண்டு. எந்தவொரு கலவையும் பாவிக்கப்படாது கற்களை அழகாக அடுக்கி "பகிர்" வேலி அமைத்துள்ள பாங்கும் பனைகள் நிறைந்த தீவில் பைந்தமிழை அழகுற எழுதும் இளைஞரும்,முதியவரும் நிரம்பியிருந்தனர்.கலப்படமற்றநேயத்தை அங்கு கண்டபின் வேறிடமற்றுப்போனது.பின்நாளில் இந்துமகளிர் கல்லூரியில் படித்தேன்.கல்லூரிகளில் என்பிறந்த இடத்தை கிண்டல் பண்ணும் ஆசிரியைகளை சந்தித்திருக்கிறேன்.அன்றைய என் மனக்குமுறலின் சவால்கள் இப்போதும் என்னுள் இருக்கிறதோ என்னவோ? இன்னும் எங்களுக்கென்றொரு நாடு அற்றுப் போன எமக்குள் எத்தனை ஏற்றத்தாழ்வு வாழ்ந்திருக்கிறது.

சுண்டிக்குழியில் வாழ்ந்தபோது என்னை மிகக் கவர்ந்தவை அரியாலை மக்களின் கலைத்திறனும், கலைச்செயற்பாடுகளும் இவர்களின் உன்னதமான கலைப்படைப்புக்களை ஒற்றுமையாக வெளிக் கொண்டு வந்து படைத்திருக்கின்றார்கள்.சந்தோசமான பொழுதுகள் அரியாலை மக்களின் கலை உணர்வுகளைச்சந்தித்தது.

மேலைநாடும் பட்டப்படிப்பும் கொண்ட என் குடும்ப சூழலில் வித்தியாசமானவளாக வளர்ந்தேன்.விஞ்ஞானம் படிக்கப்போனவிடத்தில் கவிதை,கதைகளைப் படித்தேன்.ஆங்கிலம் கற்கப்போன பொழுதில் முத்தமிழை கற்றேன்.என் இலக்கிய வளர்வுக்கு வறுத்தலை விளான் திரு.என். விநாயகமூர்த்தி ஆசிரியர் வழிகாட்டிய குருவாகும். விடுதலைஉணர்வும்,சுதந்திரதாகமும் என் குடும்ப சொத்தாகும். இதுவும் பிடித்துப்போன சங்கதிகள்.தமிழ் சமூகத்தில் ஊறிப்போன

சிலகோரங்களான பெண்ணடிமைத்தனம்,அடக்குமுறை சீதனம்,பெண்களுக்கு உயர் கல்வி கொடாமை பெண்களின்விழிப்புணர்வின்மை இவைபோன்றவற்றைக் கண்ணுற்று சந்தோசமற்றுப் போனதுண்டு.அதன்வெளிப்பாடாக பல கவிதைகளை எழுதினேன்.எனக்கு தெரிந்த எமது ஊர்தந்த கவிஞர்கள்,எனது தந்தை உட்பட பண்டிர் க.த.ஞானப்பிரகாசம்,வ.ஐ.ச.ஜெயபாலன்,சினிலோகநாதன்,சார்ள் குணநாயகம்,மா.சித்திவிநாயகம்பிள்ளை ஆகியோருடனும்,புலம் பெயர்ந்த எழுத்துக்களில் பார்த்திபன்,பெண்கள் வட்ட சகோதரிகளின் எழுத்துக்களோடு எனக்கு ஐக்கியமுண்டு.

மிக அக்கறையும் அதி ஆர்வமும் எடுத்துந் தம் பொழுதுகளில் பலதை எனக்காக விரையம் செய்து கவிதைகளை ஒன்று சேர்த்து நூலுருவில் படையலாக்கியதோடு ஓய்ந்துபோன நேரங்களில் எல்லாம் உரிமையோடு ஆலோசனை தந்த எங்கள் அன்புக்குரித்தான சுசி,இன்பா,தயா ஆகியோருக்கு என் இதயம் நிறைந்த நன்றியைக் குவிக்கின்றேன்.

அவ்வப்போது மண்ணின் ஆக்கினைகளால் உறங்கிவிடும் என்கவிதா உணர்வுகளை தட்டி எழுப்பி எழுதத் தூண்டிய தாயார்,பெண்கள் வட்ட, இலக்கியசசந்திப்பு நண்பர்கள் முக்கியமாக K.K முருகதாசன், நண்பி தேவிகா,யாழினி,கண்ணன் இவர்கள் எல்லோருக்கும் என் உள்ளன்பான நன்றி உரித்தாகிறது.

தொடர்ந்து கவிதைகளை எழுத அவ்வப்போது அதன் முதல் வாசகனாய்,விமர்சகனாய் என்ரசனைக்கும் அபிப்பிராயங்களுக்கும் மதிப்பளித்து ஒரு மனுஷியாக உலாவிட்டதோடு சகலவழிகளிலும் என் வாழ்வின் பங்காளனாய்,வளர்ச்சியில் நண்பனாய் இருந்துவரும் திரு.என்.சொர்ணலிங்கம் அவர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றி.

அன்பு
கோசல்யா

www.padippakam.com

# உன்னிடத்தில் தோழி...

சிறை வைக்கப்பட்டிருந்தால் தானே
உன்னை மீட்பதற்கு!
உனது விடுதலை
சுதந்திரம்
ஒன்றும்,
மற்றவர் கையில் இல்லையே!
உனக்கானவற்றைத் தர
யோசித்து நிற்பதும்
யாரிடம் யாசித்து நிற்பதும்
உன் வாழ்வியல் போராட்டங்களில்
அவர்கள்
பங்கேற்றவர்களா?
விலங்கு...
இதை இட்டது யார்?
ஒருவேளை...
நீயாகவும் இருக்கலாம்.
சமுதாயம்...
பயம்...
இவற்றை
கண்ணுக்குள்ளே வைத்து,
உன்னையே நீ...
ஏமாற்றிக்கொண்டிருக்கிறாய்.



படிப்பகம்

www.padippakam.com

மனதுக்குள்...
உனக்கானவை எத்தனை?
உன்னோடு வாழ்ந்தவருக்காக
அர்ப்பணித்து விட்டேன் என நினைத்து
போலியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாய்.
உனக்கான
அவற்றைத்தேடு...
இஷ்டப்பட்டதை...
ஏற்றுக்கொள்.
தடுக்கவோ,பறிக்கவோ
இங்கே யாருக்கு உரிமை?
விதவை...
அந்நியப்படுத்தி
இனம் காட்டும்
அடையாளங்களைத் தூக்கியெறி...
நீ
கல்லூரியிலும்,
குசினியிலும்,
குழந்தைப்பேறிலும்
போராடி முடித்தவள்
இது ஒரு போராட்டமா!

உன்னிடத்தில் விழிப்பு எப்போ..?
அதற்கான பாதையில்
ஆயிரம் தோழிகள் வரலாம்.
இங்கே எல்லாமே
உன்னிடத்தில்தான்



படிப்பகம்

# திருத்த

எனக்கென்று
ஒரு நண்பன் இருந்தான்
புரட்சி பற்றி பிரசங்கம் பண்ணுவான்
சுதந்திரம் எமக்குத் தேவையே என்பான்
விடியல் ஒன்று வேண்டும் என்பான்
சமத்துவம் பற்றி தர்க்கமே புரிவான்
இனிய நண்பன் இல்லையா பாருங்கள்...?

திடீரென ஒரு நாள்
காணமாற் போனான்
மீண்டும் ஒரு நாள் வந்துசேர்ந்தான்

காணாமற்போன
சேதியைக் கேட்டேன்
குசினியைக் கூட்டிடும்
அலுவலாய் போனதாம்....
கூட்டிடும் ஒழுங்கில் குழப்பங்கள் பலவாம்
கூறியபடியே கொடுபட வில்லையாம்
நடை முறை
மரபு
யதார்த்தம் என்றான்
இவனையும் திருத்த ஆயத்தமானோம்

www.padippakam.com

# சின்னவளாய்

நானும் நீயும் கட்டியவீடு
நாற்சாரமும்நல்லொருமுற்றமும்
சேர்ந்து நாங்கள் கட்டிய வீட்டில்
சேராதிருந்தது ஏற்றத்தாழ்வு

பட்டம் விட்டோம் பாதியாய் உழைத்தோம்
திட்டம் போடுவோம் தீர்வொன்றெடுப்போம்
தட்டான் பிடிப்போம் சரியாப் பிரிப்போம்
தோட்டம் போடுவோம் அறுவடை தொடுவோம்

மண்ணை அள்ளி சோறு ஆக்க
திண்ணையில் நீயும் காய்கறி நறுக்க
அண்ணன் வரவால் ஆக்கியசோறு
அங்கும் இங்கும் சிதறிப்போகும்

அம்மா அழைக்க அடுக்களைக்குதவ
மாமா அழைக்க படிப்பதற்கு உன்னை
அத்தான் நீயோ அங்கே ஓட......
அண்ணன் என்னை இங்கே இழுக்க

ஏழைகள் அவர்கள் ஏனிந்த நட்பு
அர்த்தம்கேட்டு மாமா அடிக்க
தடித்த தழும்புகள் நீயும் காட்ட
பிடித்துப் போனது விடுதலை வேட்கை



படிப்பகம்

www.padippakam.com

யாரு மாமா? நானோ வினவ
அவர் என் அண்ணனின் அம்மா கூற
யார் பங்களா கறுத்தக்கோட்டும்
அவரிடமிருக்க அம்மாவுக்குகில்லை

ஆராய்ந்துபோக அம்மாவும் அன்று
அடுக்களைக்குதவ அண்ணன் படிக்க
மாறாக இதற்கு நியாயம் பேசி
சீராய் அமைத்தேன் சின்னவளாய்

கற்றுத் தந்தாள்பெற்றவள் பாடம்
ஆற்றல் தந்தான் அவனும் சேர்ந்து
தோற்றுப்போகா துணையாகி
தொடர வாராய் தோழி நீயும்!



படிப்பகம்

www.padippakam.com

## ஒரு சத்தியம்

குழந்தை
வீரிட்டழுதது
யதார்த்தமானது தான்.

பந்துக்கள் பரபரத்தார்கள்
இவர்களின் .....
அவசரத்துக்காக
ஜனனம் நிர்வாணமானதா?

இனம் கண்டார்கள்
பிரார்த்தனைகள்
சாதகமானது

அன்னை
பாராட்டுப் பெற்றாள்
சடங்கு,சம்பிரதாயம்
முன்னிற்க வேண்டியவளாம்

தந்தை
தந்தைவழி
தட்டிக்கொடுத்தார்கள்
பிரமாதமானதொன்றைப்
பிரகடனம் பண்ணியதாக



படிப்பகம்

www.padippakam.com

பாட்டி
சொல்லியபடியே
உலக்கையொன்றை
கூரையால் வீசினார்கள்
ஆண்பிள்ளைக்குரிய
சடங்காம் இது....

இவன்
வளர்ச்சிக்காக
எல்லாமே விசேடமானது
அக்கறைகள் அதிகமானது
தேவைகள் சித்திபெற்றன

வாலிபம்
வரவேற்றது
அவனுடைய
எல்லாவற்றுக்குமே
விலைசொன்னது

விழித்தான்
யார் நான்?
கொட்டிலில்...
நிற்கும் கடாவுக்கும்...?
நான் = கடா.. சீ...

**இவ்வளவும்**
**இதற்காகத் தானா?**
**எல்லாமே**



படிப்பகம்

பொய்த்து நின்றது.

என் இளையவர்கள்
எதிர்பாலானவர்கள்
என்னதும் அவர்களதும்
[illegible] தொட்டன.

தேடலானபோது
சமுதாயம் பதிலாகி நின்றது
அண்ணன் தங்கைகள்

நாங்கள்
சேர்ந்து கொண்டோம்
கழற்றவும் உடைக்கவும்
தெரிந்துகொண்டோம்

எங்களுக்கென இங்கு
எதுவுமே...
இல்லாமற் போகலாம்

ஆனால்
அர்த்தமில்லாதவற்றை
துவசம் செய்து

அதற்கான பதில்...
பலன்களை....
தொட்டே தீருவோம்.

www.padippakam.com

# சீதனம்

சீதனம்
சிரிப்பான அம்சமிது
ஆதனமாக அர்ப்பணிக்கும்
இவளிடம்
வேதனமாக வேண்டுமாம்
சாதனமாக பொன்னோடு
மண்கேட்கும் மானிடர்
மாறவில்லை தேறவில்லை
இங்கும்
ஆற்றாத கடுங்குளிரில்
அரைவாசிக் கூலியுடன்
ஏற்றாத சுமைகளை
இதயமதில் ஏற்றி
கூற்றாக பொய்யுரைத்து
சாதனையாய் இங்குழைத்து
மாற்றான் ஒருவனுக்கு
மடிப்பிச்சை போடுகிறார்
இதைத் தூற்றாத நூலில்லை
சொல்லாத சேதியில்லை
இங்கும்
துளசிஷ்டனே வளர்கிறது



படிப்பகம்

# அவளில்லா அர்த்தங்கள்

இயற்கையின் மாற்றமொன்றை
செயற்கையாய் சித்தரிக்க
அர்த்தமில்லாச் சடங்கொன்று
அவையேறிக்கொண்டிருக்க

மண்டபம் மாலைகள்...
மற்றவைகளும் சேர்வாக
கண்ணிறைந்த அலங்கரிப்பில்
கன்னியவள் காட்சியாக
எண்ணில்லா இளசுகள்
ஏறிட்டுப் பார்த்திருக்க
சின்னஞ் சிறிசுகள்
விளக்கமதை தேடி நிற்க
சடங்கு நடக்கிறது
சபையில் நவீனமாக

அவைக்கான நடப்புக்கள்
அடுக்கடுக்காய்ச் சபையேற
சேயவளின் பிறப்புக்கான
தாயவளைக் காணவில்லை..?

வருடங்கள் முன்னாக..
தாரம் இழந்தவனாம்..
பூவோடு பொட்டும்
புறப்பட்டுப்போனதாம்..

www.padippakam.com

வெள்ளைச் சேலைக்குள்
வில்லங்கமாய்த் தள்ளிவிட்டு
வெற்றிடமாய் அவளிடத்தை
இருட்டடிப்புச் செய்துவிட்டு
வேற்று மனிதரெல்லாம்
வேடிக்கை விந்தையிது...!

வாழ்வின்
போராளிப் பெண் இவளை
புறக்கணித்து விட்டு
யாரோ நடத்துகிறார்
நவீன நடத்தினராய்
அர்த்தமில்லா சடங்கிது!
அவளில்லா அர்த்தங்கள்!!

வைபவம் முடிந்திட
வந்தவர்கள் போயாக..
தொடரும் போராட்டம்
தொடர்ந்துழைப்பாள் தனியாக.
அடுத்து வரும் சடங்கிலும்...
அவர்கள் பங்கேற்பார்கள்..

சகோதரி!
அர்த்தமில்லாச் சடங்கிவை
அரங்கேற்ற வேண்டுமா?
அந்நியப் படுத்தி–உன்னை
அடக்கிவிட்ட சேதியினை
எப்போது உணர்வாய்?!



படிப்பகம்

# * ஆளாகினேன்

மண் விளையாடிக் கொண்டிருந்த வேளையது.
அப்பா அவரை
மங்கலாகத் தான் நினைப்பிருக்கிறது.
கம்பீரமாக களையாக இருப்பார்;
எல்லாவற்றையுமே கவனிப்பார்.
அப்போதெல்லாம்
அம்மாவும் கலகலப்பாக இருந்தாள்.

ஒரு நாள்
காலம் அப்பாவை
விழுங்கி விட்டதாக
எல்லாருமாய் கதறினார்கள்,
தேடினேன் காணவில்லை.
அவருடைய எல்லாமே
வீட்டில் இருந்தன,
தொலைந்தது அப்பாதான்.

அம்மாவிடம் கேட்டேன்.
மௌனமானாள்.....
எல்லா வேளையும்....
இரண்டு வேலையும் அவளே செய்தாள்.
சமுதாய சங்கடங்களைத் தாங்கினாள்;

www.padippakam.com

அம்மா போராடினாள்
நான் ஆளாகினேன்.

போராட்டம் புரட்சி விடுதலை
எல்லாமே விளங்கும் வேளையிது!
ஆனாலும் போராட்டம்...?
அம்மாவின் போராட்டம்
அதி உயர்வானது.

அவள் சாயல் இருக்காதா என்ன!
நானும் ஆளாகி ...ஏதோ ஒன்றில்
ஒரு போராளி ஆனேன்.

* தோழி ஒருத்தியின் அம்மாவுக்காக



படிப்பகம்

# வஞ்சகத் தீ

இந்தியாவில் 15891 பெண்கள் சீதனப்பிரச்சினை காரணமாகக் கொலைசெய்யப்பட்டும்,தற்கொலை செய்தும் உள்ளனர்.1961ம் ஆண்டு முதல் சீதனம் வாங்குவது சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளது என்பதும் இவ்விடத்தில் நினைத்துப் பார்க்கப்படலாம்.

பாரத பூமியின் பாட்டனார் பாடினார்
விடுதலை வேண்டி சமத்துவம் கேட்டு
மடமையைக் கொழுத்தி மங்கையை விழித்து
இதுவும் இருக்க இன்னும் பிறந்தது.

சீதையை இராமன் தீக்குளிக்க ஏவ
தீயோ அவளைத் தீண்டாது போக
தணலும் அவளால் தணிந்ததென்று
படைத்தனர் காவியம் கற்புக்கனலென

சீதனக்கொடுமையின் வேதனை கேட்டோம்
மாமியார் ஊற்ற மாப்பிளை மூட்ட
மாதினைக் கொளுத்தும் மடமையை வளர்த்தும்
சாதனை செய்யும் சரித்திரம் இன்று

அக்கினி பகவா ஏனிந்த வஞ்சனை
அனலிடை கருக்கி அவிப்பதும் ஏனோ
கற்பினைக் காட்ட உன்னிடம் நியாயம்
கற்கச் சொன்னது கற்பனைக் கதையோ?
இந்திய தேசம் இங்கு நடப்பதோ
இருட்டறைக் கொலைகள் தற்கொலையாகி
பந்தியாய் காவியம் படைத்திடும் பாரதம்-இதில்
முந்தாததேனோ முற்றிடாததேனோ!

www.padippakam.com

# ஆடலின் அர்த்தங்கள்

சிவன்

அவன் பெருமான்...
ஆடியே ஆடல்...
அவை தீர்த்ததாக ...
ஐதீக அர்த்தங்கள்.

ஆனந்தம்

கோபம்....
சாந்தம்...இவ்வாறு இன்னும்...
அது திருவிளையாடல்
அன்றைய புராணம்.
ஆங்கே புரட்டினால்....
அது சொல்வதோ...
ஆடல் சாதனையென்று.

பிரளையம் கண்டு...

இருப்பது விடுத்து..
நகரத்தொடங்கினோம்.

ஆடித்திரிவதாய்...ஆடியே திரிவதாய்

உயர்திணை உரைக்க,
கலியுகம்; கலியுகம்..கரையக்கரைய..
அசைவற்றிருக்க அஃறிணைப்பொருளா?
அதுவும் அசையுமே..



படிப்பகம்

ஆடலின் அர்த்தங்கள்

உணரப்படாத வேளை
தேடலின் ஆய்வாய்
தெரிந்ததும் இங்கே
ஆடல் சாதனையென்றே.
ஆடியும்,கவி பாடியும்
கறப்பதென்றாலும்
அதுவும் செய்வோம்.

அவன் அமையவில்லை
அவளுக்கு
அடங்க
அடக்க
துடிப்பு இல்லையா?
பின்னே...
உங்கள் அனுபவங்களை
நாங்கள் படவில்லை...
என்றொரு ஆதங்கமா?

நோக்கிடும்
சொல்லம்புக்கான
எதிரம்பு எம்வசமுண்டு
கற்பதே தொழிலாகி
கல்விச் சாலைகள் கக்கி விட்ட போதும்
கற்றுக் கொள்ள அனேகம்..
வாருங்கள் வாருங்கள்
இலவசம் இலவசம்..

# அகதி வந்த பாதை

எழிலரசி இலங்கை மாதா இயற்கை அன்னை அழகுப் பிள்ளை
விதியரசி விளையாடுகிறாள் வேதனையால் வாடுகிறோம்
சதிசெய்யும் அரச கும்பல் சதிராடி முடிக்கிறது
கதியின்றித் தவிக்கின்ற கன்னித் தமிழ் ஈழம்
விதி முடிவு எப்போது? வினாவுகிறோம் விடையில்லை.

அழுகின்ற ஒலங்கள் அரசபடை அட்டூழியங்கள்
விழுகின்ற பிணக் குவியல்வேட்டையாடும் அரசகூலி-நாம்
தொழுகின்ற இறைவனும் தொடர்ந்து கண்ணை மூடியதால்
கழுகுகளாய் வட்டமிடும்-சாம்பல் காடாக்கினார் தமிழ் மண்ணை

பூபாளம் கேட்ட இடம் புது முத்து விளைந்த நிலம்
வேதாளம் குடி கொண்டு இனவெறிக்குப் பலியானார்
பாதாளம் செல்லுமுனை பயங்கரப்போர் ஆயுதங்கள்
ஏராளம் குவிகிறது அயல்நாடு கொடுக்கிறது
காதாளம் வலுவிளந்து கதறுகின்ற எம்தமிழர்
நோய் தாளம்போட்டுக் கொள்ள நொடிப்பொழுதில் அழிக்கிறது!

பட்டமும் பெற்றோம் பதவியும் வகித்தோம்
திட்டமாய் படித்த கல்வி சிதறியது மொட்டையாகி
எட்டியா பார்த்தது எமது அரசாங்கம்-இல்லை
கொட்டியது அரச கும்மாளம் கொடுந் தீயால் கொள்ளி வைத்து
ஒட்டிய உறவை விட்டு ஒதுங்குகிறோம் பல திக்காய்-அன்று
கட்டிய துணியோடு கப்பலும் ஏறி வந்தோம்

நாடி வந்த நாடுகள் நம்மைத் தஞ்சமேற்றபோதும்
ஆடிப் போகிறோம் கடுங் குளிரால் அவதிப்பட்டோம் புதுமொழியால்
தேடினோம் சந்தோசத்தை எத் திக்கிலும் காணோம்
ஓடிவந்தோமொழிய அமைதியை விட்டு வந்தோம்
கோடி கொடுத்தாலும் குடிப்பிறப்பு நாடுதே
மூடிக்கொள்ளும் போது விழிகள் முகாரி ராகம் காணுதே!

பெற்ற தாயைத் தந்தையை பிறந்த பொன் நாட்டை
உற்றவரை உடன் பிறப்பை மற்றும் மனை மக்களை
கற்ற கல்வி அத்தனையும் கடந்து வந்த போதும்
விற்றனர் வீரத்தை என விழம்புகின்றார் எம் வீரர்-எங்கும்
ஏற்ற ஒரு வாழ்வற்று இருக்கிறோம் சோம்பலாய்!

குடியிருந்த வீடுகள் கோட்டான் குயில் கூவுது-இங்கு
குடியிருக்க வீடுதேடி கூவுகிறோம் கூனியே-அன்று
மடிபெருக்க உழைத்துத் தமிழன் மகிழ்திருந்தான்-இந்நாளில்
படிகள் ஏறி வேலைதேடி மனப்பலம் இழந்து வாழ்கிறான்-இதில்
அடி எடுத்து வைத்தாலும் *out of city problem*!

ஆலமரங்கள் அங்கே அதன் விழுது நாமிங்கே
ஜாலம் காட்டிப் பேச்சு வார்த்தை நடத்துகிறார் தலைவராம்
பாலம் போட்டு வாழ்வமைக்கப் பாடுபடும் இளைஞரை-அரசு
கோலம் போட்டுக் கொடுமை வாதி குறிகள் வைத்து காட்டுது-நாளும்
ஏலம் போட்டு விற்குது எம் தமிழர் உயிரினை

1985

# சத்தியம்

மனம் எனும் பாத்தியில்

விதைத்திடும் விதை
வித்தின் சாயலே
பயிராவது……
விசயங்கள் விதைப்பானால்
விளைவாகும் விளைச்சல்
பற்று! பற்றுண்டதால் பலதில்.
பற்று தூவலால் பயிரானது
ஆசைகளின் அலைக்கழிவுகள்
ஆசைகள் உறங்காது
உயிராக்குவது கோபம்!
கோபம் கொண்டாடுவதும்
கொண்டு வருவதும்
மோகம் முளைச்சலே
மோகம் முளைத்தால்
முளையை மூடுவது
ஞாபக அழிவுகள்
ஞாபகம் அழிவால்
நாற்றின் கூட்டல்
விவேகம் கெடுதலே
வீரம் சாயும்
விவேகம் வெட்டானால்
மனிதம் மரணிக்கிறது.
மரணிப்பதன் சத்தியம்
தானே அழிகிறான்

www.padippakam.com

# தாயக வெண்புறாக்கள்

நடந்து வந்தபாதை எல்லாம் புஞ்சணைகள்
நடக்கப் போகும் வழி நெடுக நெருஞ்சிகளோ
கடந்து வந்தார் இன்னல்களைக் கர்ம வீரர்-
மடந்தையர் வெண்புறா ஆவதற்கோ?
படர்ந்து கொண்ட பாவையரின் விருட்சங்கள்
பட்டதால்- படர்க்கையின்றி வெண்ண புறாக்கள்
தொடர்ந்தது தமிழ்தலைக்கு தூண்டில்கள்
தொட்டு விட்டார் வெண்புறாவின் தூய்மை போச்சு
வடக்கை(ஜ)திரும்பிப் பார்க்கையிலே
முடங்கி விட்டார் வெண்ண புறாவின் முனுகல் கேட்டோம்
"இடுக்கண் களைவோமென" இறங்கினார்கள்
இலங்கை நகர் இந்நிலைக்குள்ளாச்சே!

மாங்கல்யம்-மஞ்சளோடு-மலர்கள்-பட்டும்
மறைந்தங்கே போகும் காட்சி கண்டோம்
பூங்காக்கள்-புனிததலம்-கல்லூரி-புனிதர்களின்
பூவுடல்கள் புதையக்கேட்டோம்
வேங்கையான் தமிழன் வாரிசுகள்-அங்கே
வீடமைக்கும் விளையாடும் எலும்பதனால்
மாங்காயை அடிப்பதற்கு எம் சிறார்கள்
மறு கரத்தை தேடுவார் அது பறந்திருக்கும்
பாங்கை நாம் பார்த்திருப்போம் மனக் கண்ணால்
ஏங்குகிறோம் எம்இனத்தை எண்ணியெண்ணி
எம் விடியல் எப்போது நாமறியோம்



படிப்பகம்

www.padippakam.com

# மக்களின்றி மண்ணா

வானில்லா சூரியனை
நாம் காண்போமா
வளர்கின்ற புதுமையென
வகை கொள்வோமா
நாளெல்லாம் பகலாக
நாம் காண்போமா
நல்லதொரு மாற்றமென
இதைச் சொல்வோமா?
நீரில்லா நிலமொன்றை
நாம் காண்போமா
நிலையான பயிர்க்காட்சி
கண் காணுமா?
அவையின்றி அரங்கேற்றம்
நாம் காண்போமா
அதுவொரு அரங்கேற்றம்
என்றாகுமா?
அசைவின்றி உலகொன்றை
நாம் காண்போமா?
அதுவொரு விஞ்ஞானம்
விஞ்ஞானயுகம் என்போமா?
இல்லை... இல்லை
மக்களின்றி மண்ணொன்றை
நாம்காண்போமா?
மதிகொண்டு விதியென்று
வரைசொல்வோமா?
மண்ணோடு மக்களும்
அது வேண்டுமே
மக்களவர் இன்று
இழப்பதற்கு எதுவும் இல்லையே.



படிப்பகம்

# படையல்

செத்துப் போனார்கள்
சாணக்கியம் பேசினார்கள்
சாவைத் தந்தவர்கள்
யாரோ இவர்கள்?
கூலிக்ககாக வந்து போனவர்களே

கடல் மணலும்
கள்ளிச் செடியும்
கல்லறையும் ...பெட்டியும்...
இவை....
காவல் என்றானதே

எங்கள்....
கனமான இதயங்கள்
எங்கே போயிற்று...
இங்கேயும்...உங்கள்
ஜீவியம் நடக்கிறது

உங்களை...
சுமப்பதற்கு
அருகதை இல்லாமற் போகலாம்
வாழ்வியல் பற்றி

www.padippakam.com

பற்றுக் கொண்டதால்
இரண்டாந்தர மனிதராக
பிழைத்துக் கொண்டோம்

மனித உரிமை
காணப் புறப்பட்ட போது...
விலாசங்களையும்....
கூட்டலான தகமைகள்..
தொலைத்து விட்டார்கள்

இது பற்றி
வந்து போனவர்களுக்குத் தெரியாது
அலங்கோலங்கள் மட்டும்
அறிந்தவர்கள் அவர்கள்

முகவரி தொங்கிய
எஞ்சியவையும்.....
எச்சங்களும்.....
வாழ்ந்து கொண்டிருக்கையில்
சாவு யாரைத் தொட்டது.



படிப்பகம்

# தேவிகள் பாராமுகமோ

அத்தனை வீரமும் ஆளுகை பெற்ற
அன்னையே துர்க்காதேவி
எத்தனை அற்புதம் காட்டினாய் அன்று
இவை கூறும் புராணம் நூறு
வித்தினை போட்டு விளை பயிர் அற்ற
விம்மிய எம்மண்ணை
இத்தனை காலமும் ஏன் மறந்தனையோ
எங்கே உன் சக்தியெல்லாம்

ஆளுகை ஆட்சி அனைத்துமே
உன் அலங்காரக் கதை தானா
சூழுகை துன்பம் தொடர்க வினையென
சுந்தரி பாராதிருக்கலாமோ
நாளுமே பொழுதாய் மண்படும் பீதி
நாம் ஓதித்தான் உணர்வாயோ அம்மா
தாளிகை பிரிந்தன வழி நெய் போல்
தாயகக் குருதியின் தரிசனம் பாராயோ

திருமகள் தேவி செல்வநாயகியே
திருமறை திருசுடரே ஒருமுறை கேளாய்
அருமையாய் அரி அருகமைந்தவளே
உன் அரிகரன் தூங்கலாமோ?
கருவில் இருந்த சிசுவுக்கும்....
காவல் காத்தவன் உன்னவனன்றோ
ஒரு அவதாரமாகி சர்ப்ப உறக்கத்தைக் கலைத்திடு
உய்திடும் எம்மினம் தாயே

www.padippakam.com

முத்துமாய் பொன்னுமாய் முடியுமாய் இலங்கையில்
செல்வமண் சிறப்புகள் யாவும்-இந்த
சொத்து உனதேயாகும் தொலைவது இன்று
நீ தோற்றதே ஆகும் அன்றோ
இத்தனை இழந்து ஏன் ஏழையானாய்?
இதை உன் மனம் இடங்கொண்டதோ
சொத்தினைக் காத்து இலட்சுமீகரம் கொள்
தோன்றுக தோல்வியே வேண்டாம்

வித்தகர் நாவினில் விளையாடும் தமிழ் வாணி
விரக்தியோ இன்று உனக்கு
மத்தினைப் போல மாற்று மொழியால்
மாறினரோ உன் மழலைகள் இன்று
அத்தனை துயரமும் ஆகியே அண்டினோம்
அன்னை மொழி அழிவை அறிவாயோ
கத்தினார் உன்சேய் கதறினார் உனை வளர்த்தார்
கல்வியைக் காத்திட வரவில்லையோ

ஆய்வுகள் அறிஞர்கள்- அருமறை அவைகள்
ஆராய்ச்சி பொக்கிசம் அது நீறானது
ஒய்வின்றி உழைத்தவர் உத்தமர்
உண்மை நல் அறிஞர்கள் சேவைகள்
மாய்ந்தனரே கல்வி மடிந்தது மண்திறம்
மாற்ற மொன்றில்லையா மாதே
தாமரை இருப்பும் தாங்கு வீணையும்
ஓங்கிய நாதத்தால் உணர்ந்திடவில்லையோ
தேவிகள் மூவரின் கடைக்கண் பார்வையால்
தேறிடுமோ என் இனம் அறியோம்.



படிப்பகம்

# தேடலில் ஒரு கவியானது

சுத்தமாகப் பார்த்த போதும்
அத்திவாரம் சரியாகத் தானிருந்த நினைப்பு
ஆட்டம் கண்டுவிடும் சாத்தியத்தை,
அறியாமற் போனது ஏன்?
நம்பிக்கை வேசங்களின் போர்வை
பவித்திரமான நட்பு
பழுதானது எப்போ?

மனமே!
மாசில்லா நட்பை மனதாரத் தூவிவிட
தூசினைச் சொருகி
துடைப்பமதாற் தொட்டுவிட்டால்,
இங்கே...
தோழமை தோல்வி தழுவ
தேடலே வினாவாக
பேராசைகளும் போலிகளும்
பதிலாகியது இதற்கு
புரியாது விதைத்தது மூடத்தனம்.
எங்கேயும்....
நம்பிக்கைக் கழிவு நட்புக்கு எதிரானவை.
ஆசைக்கு கூட்டல் சுயநலவிரிப்புகள்,
பகுத்தறிவுக்குப் பட பிந்தியது.
நட்பு ஒன்றும் கருவியாவதில்லை.
தோழமை எப்போ சுயநலமானது?

www.padippakam.com

சிநேகிதம் தேவைக்காக மட்டுமல்ல
புரியாது போனவை;
புரளி அனுபவங்கள்
புரியாமற் போகட்டும்
பிறப்புக்கள் சிறப்படைய வேண்டாமா?
தோழமைக்காகத் திவசம் செய்த
உன் பொழுதுகள்
புனித சேவைகள்
போகட்டும் புண்ணியமாக,
இதுவும் இரவல் தான்
புரியாதோருக்காகப் புண்பட்டுப் போகாதே
கலியுகம் இது ....

கண்டு கொள்ளாதே
கள்டங்களை
ஈரமான நெஞ்சுக்கு
பாரமாக வருடல்கள்,
தலை முழுகி,
கிரிகைகளுக்காக
ஆயத்தமாக!
மனம் அப்பட்ட மறுப்பு
தேடலாக பெருந் தன்மை தான்
அறியாமற் செய்கிறார்கள்
மன்னித்து விடு! என்றது



படிப்பகம்

www.padippakam.com

# அவன் அறிந்து கொண்டது

மரங் காய்த்து விட்டது
கனிந்து விட்டது
அறிந்து கொண்டது...
கல் எறி படுவதால்!

சரம் தொட்டதும்
துளைகள் பட்டதும்
பதம் வந்து விட்டது...
பலன் புலனானதே!

அரம் பட்டது
அறுவை கொண்டது
புதிய கலங்களால்
ரணங்கள் காயுமே!

கரம் பட்டது
கன்றிப் போயினும்
கதிர் வீச்சதன்
கன்றல் போக்குமே!

உரம் கொண்டது
மரம் சாய்ந்திடா
கனம் காத்திடும்
மன விழுதுகள்!



படிப்பகம்

www.padippakam.com

தரம் உள்ளது
தகுதி பெற்றது
தலைகள் உருண்டன
நிலைகள் மாறிடா!

உரமிட்டதும்
உலை வைத்ததும்
கலை வார்த்ததும்
உறுதியாய் நிலைக்கவே!

பேரம் பேசியும்
தூரம் தொலைத்திடா
தாரகம் அதன்
பரிமாணமே...!



படிப்பகம்

www.padippakam.com

# கலியுகம்

நல்லவன் நடப்பதற்கு நாதியில்லையே
நாறும் சமுகம்மிங்கும் தேறிவில்லையே
வல்லவன் வாழ்வதற்கு வாய்ப்புமில்லையே
வாழ்வுமொரு சாக்கடையாய் வருந்தலாச்சுதே
புல்லரும் புனிதரும் போராடும் நேரமிங்கே
புனிதரெல்லாம் தோற்றுப்போகும் காலமாச்சுதே
வில்லனோடு விதியும் சேர்ந்து விரசமாடுதே
வீணருக்காய் காற்றுமிங்கே வீசலாச்சுதே

யுகம்தரமாய் தேடிக்கொண்ட சாஸ்திரங்கள்
வனாந்தரமாய் வினாடிக்குள் மடியலாச்சுதே
சுகம்தந்த வேதங்கள்-பாச உறவுகள்
சுகப்படுத்தா அனாதையாகி தொலையாச்சுதே
முகம்காணா விருந்தோம்பல்-நல்லபண்பு
புறம் கூறும் பிழைப்பாகி பொய்த்துவிட்டதே
அகமெல்லாம் ஆச்சாரம் வெற்றிடமாகி
அழிவுப் பிரளயமொன்றாகப்போகுதோ

எத்தனையோ எட்டப்பர் தோன்றலாச்சுதே
ஏழைகளின் வாழ்வுமதால் பலியுமாச்சுதே
அத்தனையும் பொய் புராட்டாய் உருவம் மாறுதே
அதில்-இன்பம் நொடிப்பொழுதில் திருப்திகாணுதே
பித்தெனவே பிடித்திட்ட பீதிநோயை-பெரும்
வயிற்றெறிச்சலோடு பேடி கொள்வாரோ!
மொத்தமாக அறுவடைக்கே காத்திருக்கும்
வாரிசுக்கே தேடிக்கொண்ட சொத்துமாகுதே!



படிப்பகம்

# வேஷம்

கேளீர் கேளீர்
விழிப்பு பற்றியும்
விடுதலை..சமத்துவம்..
கலாசாரம் பற்றியும்
சொன்னது கேட்டோம்

உங்கள் இல்லக்கிழத்திகள்
இல்லங் காக்க
எங்களை நீங்கள்
எங்கே அருட்கிடுறீர்

சமூகச் சீர்கேடான
தூசி துடைக்க...
ஆர்வம் கொண்டோம்
அனுப்புங்கள் அவர்களை
பலமும் பெறுவோம்.

எங்கள் இளமதை
உங்கள் நாவால்...

இனிக்க உரைத்து
எழுதத் தூண்டும்
படையல் திரட்டும்
பாவலர்களே
ஆக்கம் தேடும்
ஆய்வாளர்களே
உங்கள் பாகம்
பாங்காய் இருக்க...
பாதைக்கு வராது
பூட்டிவைத்தீரோ
பூட்டை உடைப்பீர்
உங்களை உணர்வோம்!



படிப்பகம்

## மேடை

மேடை போட்டு மேதாவி பலர் கூடி
சாதி நீக்கம் பற்றிக் கூடை நிறையக் கொட்டிப் போனார்கள்
ஓடை வரும் நீரில் ஓர் அடைசல் உள்ளது போல்
சாடையேனும் சாதி நீக்கம் அவியவில்லை
தாடையில் கை வைத்து சாய்ந்து போனார் முன்னோர்
ஓடி வந்தோம்-தாய் மண்ண விட்டு வந்தோம்
இங்கும் தேடிப் பார்க்கின்றார்
சாதி எதுவென அந்தரமானோம் அமைதியில்லை
மண்ணணில் கூடி நாம் இருப்போமென்றால்
கூனுகிறார் கூசுகிறார் ஒன்றிருக்க.

www.padippakam.com

# பூங்காற்றே

எத்தனை காலமாய் நானழைத்தேன்
அத்தனை நாணயமாகவில்லை நீ எனக்கு
பக்தனைவிட்டு நீயும் பாவிகளோடு இணைந்து
முத்தினைப் பொழியுமெந் நாட்டில்
சொத்தினை முழுங்கி விட்டாய்

மெத்தவே வளர்ந்தாய் தாலாட்டில்
சத்தென தளிர் அடைந்தாய் இன்று
கத்தும் குரல் கேட்டும் காதிடை கொள்ளவில்லை.
கொத்தடிமையாகும் கோலம் குறியது தெரியவில்லை.
இத்தனை சேதியும் ஏறிடவில்லை உனக்கு
பித்தனைப் போல் நாளும் பிதற்றினேன் உதவிக்காக!

சென்றிடு தூது என்றேன் சேதியைச் செப்பு என்றேன்.
மன்றங்கள் வாசல் சென்று மாற்றிடு மனசையென்றேன்.
கன்றிய இதயங்களைக் கணக்கிட்டுச் சொல்லி வைத்தேன்.
முன்றலில் நிலைத்து நின்று மூழ்கினாய் தேன் இதழில்
அன்றது தந்தபோதை அறிவையே மயக்கிக் கொள்ள
நின்றது என் நினைவு இது நீதியோ பூங் காற்றே!

நன்றது செய்தாய் நாணுகின்றேன் உன் செயலால்
தொன்று நீ சென்றது தூது ஒரு காதலுக்காய்
இன்று நீ சென்றதும் காதல் சேதிகள் சொல்வதற்கோ
என்றது ஏற்பாய் தாயக சேதி சொல்ல
அன்று தான் உனக்கு ஆயிரம் கவி படைப்போம்!



படிப்பகம்

# பற்றீரியங்கள்

எங்களைப் பற்றி.
பேசாதவர்களே இல்லை
கண்ணுக்குப் புலப்படாதவர்கள்....
செயல்கள் மட்டும் வெளிப்பாடாகும்
எங்கள் ஜீவியம்
உயிர்களிடத்தில்தான்
தொற்றிக் கொள்ளும் முறையே
அலாதியானது
நாம் வாழ வேண்டுமானால்
அறிவு உங்கள் பக்கம்
வலிந்து கொண்டது நாங்களல்ல
பிறப்பின் இரகசியம் இதுவானது
கண்ணுக்கு தோன்றாத எங்களை
கண்டு பிடிக்க...
ஆய்வுகளும் ஆராட்சிகளும்....
அழிவதாக இல்லை...!?
ஆங்காங்கே.......

அஃறிணை,உயர்திணை.....
எமது குடி நிலங்களான
ஆறறிவு ஆற்றல்களைத் தோற்றடிக்க
தோற்றுப் போனது வல்லமை.....
தோற்றம் சிறிது! வல்லமை பெரிது!
வன் முறை வாழ்க்கையானது
இஷ்டமில்லைத்தான்
மனிதன்.....பற்றீரியங்கள்
உடன்பாடு ஒத்து வருமா?....
நீங்கள் சுதந்திர தாகிகள்
தொலைத்து விடுவீர்கள்.

www.padippakam.com

# மனிதம்

நாட்டிற்காக உன்னால் நன்மை செய்யாது போனாலும்
ஏட்டில் இடம் பெறும் ஏந்தலாய் இல்லையானாலும்
பாட்டில் போற்றும் பாட்டாளியாக உழைக்காது போனாலும்
உன் வீட்டிற்காக கூட வாழத்தெரியாது போனாலும்–
காட்டில் வாழும் மிருகமாக மாறாமல்
நாட்டில் ஒரு மனிதனாக வாழப்பார்

பாரின் சுதந்திரத்திற்காகத் துப்பாக்கி ஏந்தும்– ஒரு
போராளியின் துணிச்சல் உனக்கில்லாமல் இருக்கலாம்
மார்பில் எதிரியின் துப்பாக்கி ரவைகளை ஏற்க
இயலாத ஒரு கோழையாக இருந்தாலும்– ஊரில்
பட்டம் பதவிபெறும் தகமை அற்றவனாய் இருந்தாலும்
நெஞ்சில் நேர்மை கொண்டவனாய் வாழப்பார்!

உன்னால் உறவினருக்கு உதவி இல்லாது போகலாம்
பின்னால் உள்ளவரை தூக்கி விடும் பெருமையற்றவனாகலாம்
தன்னால் வரும் உதவிகளைப்பெற்று வாழ்ந்தாலும்–பிறர்
சொன்னாலும் சுவையாகச் சிந்திக்க முடியாது போனாலும்,
உன்னால் ஒருவருக்கும் உபத்திரவம் இல்லாது இருக்கட்டுமே!

பிறப்பில் உனக்கு பெருமை இல்லாது இருக்கலாம்,
வளர்ப்பினால் வசதிகள் வாய்க்காது போனாலும்
சிறப்பான வாழ்க்கை அமையாது போனாலும்
இரந்து வாழும் ஏழ் நிலமை ஏற்பட்டாலும்,
மறக்காது ஒரு மனிதனாக வாழப்பார்,
இறக்கும் போது இவன்தான் மனிதன் என இறந்துகொள்.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் நிலைகொண்ட இந்திய இராணுவத்தின் உயிர் அழிப்பில்

எனையீன்ற தந்தை

இளைப்பாறிய அதிபர் திரு. S.N.கந்தையா (J.P.) அவர்களும்

என் அண்ணா

ஆசிரியர் திரு.என்.கே.தர்மலிங்கம் (M.A,DIP.in Ed.) அவர்களும்

20.10.1987 இல் யாழ்/சுண்டிக்குளி ம.கல்லூரியில் கொல்லப்பட்டனர்

இவ்வாறு நாமிழக்கும் உறவுகளில் இவர்கள் முன்னவருமல்லர் இன்னும் இவரோடு இவையாவும் முடிந்ததுமில்லை.

யாரொடு நோவோம்
யார்க்கெடுத்துரைப்போம்!



படிப்பகம்

# என்னுயிர் தந்தைக்கு

குயில் இங்கு கவிபொழிய குரல் மாறிப்போச்சு
மயில் இங்கு நடமாட மனம் மாறியாச்சு
பயில்கின்ற தமிழ் அங்கு பாடையே றியதால்
துயில்கின்ற விழித்தூக்கம் தொலைந்திங்கு போச்சு

எதில் இங்கு எம் இழப்பு ஈடாகக் கொள்வேன்
பதில் ஒன்று காணாது பரிதவித்தேன் ஒரு மகளாய்
தந்தையெனில் அதன் விளக்கம் எந்தந்தையே
தமிழ் என்றால் அதன் இனிமை அவரே தான்
அன்பு எனில் அதன் சொரூபம் அவரே தான்
அறிவு என்றால் அர்த்தம் அதனுள் தான்

சிந்தையிலே தெய்வமும் சிரமாகக் கல்விப்பணியும்
விந்தையான ஆற்றலால் விளங்கினார் வித்தகனாய்
நொந்தவர்க்குச் சமாதானம் விளம்பலில் நேரானார்
எந்தனுக்கொரு சமாதனமின்றி ஏங்கினேன் இந்நாளில்
கற்றதைப் பயன்படுத்து கவி எழுத வழி சொன்னீர்
மற்றக் குறைகளற்று மக்களாக்கிப் பார்த்தீர்கள்

மாற்றமொன்று தந்தோமென வந்தனர்-அரிசியோடு
வாய்க்கரிசி போட்டனர்-மாய்த்தனர் மண்ணையும்
கூற்றுவனாய் மாறியங்கே குலைத்தனர் திலகமதை
ஏற்றமிகு புதல்வனை இழந்தனள் இலங்கை மாதா
ஊற்றமிகு மகனோடு உடன் வழி போனீரே
போற்றுகின்றேன் எந்தந்தையே- புறப்பட்டீரோ
தமிழர் சேதி சொல்ல?!

www.padippakam.com

# என்னுயிர் அண்ணாவுக்கு

மன்றங்களில் தமிழ்முழக்கம் புரிந்தகாளை
மாதவமாய் பெற்றோமென மகிழ்ந்தவேளை
குன்றிலிட்ட விளக்காய் ஒளிவிட்டாயே
குலவிளக்கை அணைத்திட்டார் கொடுமையே
இன்று நீ இல்லை என்றிட்டார்கள்
ஏற்பதற்கில்லை- இறகொன்று இழந்தோம்
என்றுமே கல்விக்கே கரைத்திட்டாய்
இறுதியிலும் கல்லூரியிலே மூச்சை விட்டாய்
நன்று இதோ!கொடிது ! கொடிது!!
நாம் இழந்தோம்-நம்மினிய தமிழ்மகனை!

அன்றாடம் உனதில்லம் அழகான கல்லூரி
சுந்தரமாய் விளையாடும் உன் போதனைகள்
மன்றாடும் உரைகேட்க மாணவர்-நிதம்
வென்றிடுவர் பரீட்சையில் உன் விதைப்பால்
கொன்றிட்டார் கல்வி சுரங்கமதை
குறைந்திட்டது கல்விக்கொரு தூண் ஒன்று
நின்றிட்டது நெஞ்சமதில் சிலுவைகளாய்
நேர்ந்திட்டது சுமக்கிறோம் வழி நெடுக

இறுதியாய் எழுதிட்டாய் ஆராய்ச்சி நூலொன்று
இதன் விழா எடுப்பதற்கு இருவாரமிருக்க
உறுதியாய் இருந்தீரே தாய்மண் உயர
ஒருமாதமிருந்நதது வளாக உயர்பதவி ஏற்க
மறதியாய் இருந்தாயண்ணா உயிரைப் பேண
மறைந்தீரே தந்தையுடன் வழித்துணையாக
மறதியாய் நாமிங்க உயிர்காக்க வந்தோம்- நீ
பொறுதியாய் இருந்தாய் விடிவு வருமென
அறுதியாய் கொண்டனரே அண்ணா உனதுயிரை
ஆற்றாது தவிக்கின்றேன் ஒரு பாசமலராய்.


படிப்பகம்

www.padippakam.com

# சமர்ப்பணம்

வானத்து நட்சத்திரங்களிடையே
மின்னிக் கொண்டிருக்கும்
அழகு தாரகையே.....
உன்னை இனங்காணமுடியாதா..என்ன?
என் கல்லூரி ஜீவியத்தில் பசுமையான
உன் போன்ற ஒருத்தியை
சம்பாதிப்பதில்
இதுவரை
தோற்றுப்போனேன்
உன்சடுதி மரணம்...அந்தப்பிரிவு ஈடு செய்யமுடியாததுதான்

எத்தனை
வசந்தமாய் பூத்து நின்றவயதில்
வாரிக்கொண்டான்
காலனவன்–இங்கு
நட்புக்குபிச்சை...பாத்திரங்கள் கலட்டம்
உடலால் பிரிந்தும்..துயரக்கவிபாடியவன்..நீ
உயிரால் பிரிந்து...சொப்பனங்களில்
பிரசன்னமாகி

உன்நினைவை நிலைநாட்டுகிறயா
மறந்தேனா.....நினைப்பதற்கு?
நாடும்...நம்தமிழர் பாடுகளும்
நீ சந்திக்காதவை...சாந்திகொள்
அந்தளவில் புண்ணியாத்துமா நீ என்பேன்
நிஜம் போலிகளை நிராகரித்துபோனாய்
என்நினைவு மட்டும் அலைக்கழிக்கப்படுகிறதா?
காரணம்....எம்சிநேகம் நிஜமானது
நட்பில் ஏழையாக்கிய உனக்கு
என் இதமான சமர்ப்பணம்.



படிப்பகம்

# காலம் பிறக்கவில்லை

காலம் பிறக்கவில்லை கவிதை முடியவில்லை
கோலம் மாறிமக்கள்கொள்கைமாறுட-இன்னும்
காலம் பிறக்கவில்லை கவிதை தொடர்கிறதே

ஜாலம் காட்டும் புவிவாழ்வில்மனிதன்
தாளம்போட்டுத் தலையாட்டும் பொம்மைகளாய்-சுயநல
பாலம்போட்டு துரைமாராகிவிடும் அந்த
கோழைத்தனம் இன்னும் கொடிகட்டிப் பறக்கிறதே!

கற்றுணர்ந்த பாடமெல்லாம்காற்றினில் பறக்கவிட்டு
பெற்றுணர்ந்த தாய்மையினை பேடியாய்ப் பழித்துரைத்து
மற்றவரை சுற்றவரை மனதறியத் தூற்றிவிட்டு
முற்றுமுணர்ந்தவர் போல் முகத்திரை போட்டபடி-மனதில்
புற்றுநோய் வளர்க்கின்றார் இன்னும்
புவிவாழ்வு எத்தனை நாள்.

சற்றுணர்ந்து பார்த்துவிட்டால்-மனிதன்
சாவுடனே நற்பெயர்தான் எடுப்பாரோ
சற்றுத்தள்ளிப்போய்விட்டால் சாடுகிறார்பின் நின்று
பற்றும் பரிவும் பாசமும் உள்ளதுபோல்
தொற்றி மனிதர்கள் தூபம்போட்டு விட்டு
பெற்ற பலனை பெரிதும் நினைக்காமல்
சற்றும் மனச்சாட்சி இல்லாது தலைநிமிர்ந்து நடக்கலாமோ!

தொற்று நோயாக தொடரும் இம்முறையை
முற்றும் களைத்தெடுக்க முன்வருக பேணாக்கள்!
திட்டம்போடும் இந்த சதிகாரச் செயலினை
எட்டி உதைத்திடுவீர் எழுத்தாணிதனைக்கொண்டு!

வாழ்ந்தநாள் கணக்கில்லை-நாம்
வாழ்ந்த முறை கணக்கெடுப்போம்
ஒய்ந்து உடல் விழும்முன்னே
உருப்படியாய் ஏதும் செய்வோம்
சாய்ந்துடல் கருகுமுன்னே-நல்
கருத்தைச் சமைத்திடுவோம்

காலம் பிறந்திடுமோ என்கவிதை முடிந்திடுமோ
கோலம் மாறிமக்கள் கொள்கை சீரடையும்
காலம் பிறக்காதோ கவிதை முடியாதோ.

*1986*

www.padippakam.com

# விடியல்

தொலைந்து போன மக்களுக்காய்
துயரக்கவி பாடவா?
அலைந்துழியும் அன்பருக்காய்
ஆத்தித் துதி பாடவா?
கலைந்து போன குருவிக்கூட்டின்
கட்டியங்கவி பாடவா?
கருத்தழிந்து போன மண்ணின்
கண்ணீர்க் கவிபாடவா-இங்கு
செருக்கது கொண்டலையும்
நிர்வாண சேதிகளைக் கூறவா..

விடிவிருந்தால் எங்களுக்கும் விமோசனம்
மண்ணில் விளையாட சிறார்கள் முந்துவார்
பிடித்து விடும் மாங்காயும் தேங்காயும்
கடித்திடக் கற்களைத் தேடுவார்
அடிப்பதற்கு எலும்புகள் ஓடி வரும்
உடைப்பதற்கும் எலும்புகளே உதவிடும்
நடித்திருப்போம் நாமிங்கு வெள்ளையராய்
நாசிகளின் போதைக்கு...
படித்திட முடியுமோ மண்ணின் கதை
பகற் பொழுது முடிந்திடுமோ எங்களுக்கு!



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்ந்தோமா இல்லையா

வாழ்வும் வளர்வும் வனப்பிலா இருப்பும்
தாழ்வும் மனதில் தருப்பிலா உணர்வும்
சூழ்கின்ற நாசியும் தூரத்தும் வெள்ளையும்
ஆழ்கின்றபோது வாழ்ந்தோமா இல்லை!

அருகில் வாழும் புரியாப்பேச்சும்
கருவில் வளரும் அகதிச்சிகவும்
மருகிப்போகும் கலாசார சேதியும்
ஒருத்தரும் உணரா எதிர்கால நினைப்பும்
தெருவில் போகும் ஐரோப்பிய நாயின்
உருவில் சாயும் வாழ்வும் ஒரு வாழ்வா?

பரிகள் பன்றிகள் பண்ணைகள் சேர
வரிகள் குறையா குசல விழிப்பும்
உரித்தெடுக்கும் உணவுச் சாலையும்
அரைக் கூலியுடன் அகதி வாழ்வும்
மரித்து வாழும் வாழ்க்கை இது இல்லையா

தாய் நாட்டுத் தேவையும் சகிப்பிலாச் சேதியும்
நாய் போல் எம்மை நினைக்கும் உறவும்
காய்ந்த தாகமும் கருகிட்ட விழிப்பும்
தேய்கின்ற உடலும் சேரும் நோயும்
ஏய்க்கின்ற துரையாய்! எண்ணிடும் நிமிடமும்
போய்க் கொண்டிருக்கும் இதில் வாழ்ந்தோமா இல்லையா?



படிப்பகம்

www.padippakam.com

# உண்மையின் பக்கம்

போட்ட விதை நாற்றாகி
பொழுதெல்லாம் பார்த்திருந்து
நாற்றெல்லாம் தோப்பாகி
விழுதாகப் பார்த்திருக்க
பழுதொன்று விழுதங்கில்
பட்டதுவே பகைமையது கொண்டாட

யார் யாரோ நகையாட
நலிந்திங்கு உரையாட
பாரிங்கில் பாராது
போரங்கில் போனார்கள்
தார் அணிந்த தலைவரெல்லாம்
தலைகுனிய வீணிங்கு
குலம் பேசி நிலம் தேடும்
பலதிங்கு தலை நிமிர

ஆகா ஆகா
பலனொன்று பயனொன்று
பாராத போதும்
தானிங்கு செழிக்காதா?
தரமொன்று சேராதா?
உரைகூறப் புறப்பட்டால்
உண்மையின் பக்கமெனக்
கவிபாடும் போலி
கதையாகிப் போகாதா?



படிப்பகம்

# சங்கத் தமிழர் அன்று...கலியுகத்தமிழர் இன்று

சங்கத்தமிழர் தமிழ்மொழிகாக்க தவமிருந்தான் தன்னுயிரீந்தான்
மங்காபுகழ் வளர்க்க பொருள்தேட மறுநாடு ஏகினான்-இன்று
பொங்கும் இனியதமிழ் புதிய மொழியாகி-தமிழன் தஞ்சமென
தங்கும் நாடுகளில் தடுமாறி நிற்குது காண்!

வேலேந்தி வில்லேந்தி வீரப்போர் செய்தார்களாம்
பாலேந்தும் பாலகனும் புறப்பட்டான் போருக்காய்-இன்று
நூலேந்தும் வாலிபரும் தன்னுயிர் காக்க தஞ்சமதுகோரியதால்
செங்கோலேந்தும் ஆட்சி கொடுங்கோலாட்சியானது பார்

குற்றத்தை குற்றமென கொண்டாலே கொலைத்தீர்ப்பு
தப்பைப் தப்பென வகுத்தால் தண்டனை-இன்று
குற்றத்தை குற்றமெனக் கூறுவதும் குற்றம்
தப்பைத் தப்பென்றால் அது தவறென்னும் தலைமையாட்சி
பெண்ணை மாதாவாக பெருமைமிகு தெய்வமாக
கண்ணகை அவதாரமாககருதினாராம் கதையிலவை-இன்று
உண்மையெதுவெனில் பெண்ணொடு வரதட்சணை கேட்கும்
கண்ணிழந்த கலியுகத் தமிழரை கண்ணாரக் காண்கிறோம்



படிப்பகம்

www.padippakam.com

# கல்,கடல்,கவிதை பற்றிய சில நினைவுகள்!

"மப்பன்றிக் கால மழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது; ஏர்
ஏறாது; காளை இழுக்காது;எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன்விளைப்பான் என்னூரான்.
......."

என்பார் மஹாகவி உருத்திரமூர்த்தி.அவர் காட்டிய அந்தத் தரை அதோ தூரத்தே தெரிகிறது.

கல் விளையும் பூமி ஒன்றை நீங்கள் கண்டதுண்டா? "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் " என்ற பழமொழி அந்தப் பூமியின் நடைபழகும் குழந்தைக்குக் கூடத் தெரிந்து விடும் சாமானியம்.நீங்கள் வெளியில் இறங்கி நடந்தால் உங்கள் கால் விரல்கள் ஏதோவொரு கல்லில் மோதிக் காயப்பட்டுத்தான் வருவீர்கள்.சிதைந்த கால் விரல் நகங்கள் தான் அவர்கள் அடையாளங்கள்,கன்னத்தில் கீறிவிடும் மேற்காபிரிக்க மக்களாக. ஆக்காட்டியிடம் கேளுங்கள்:

" ஆக்காட்டி ஆக்காட்டி எங்கெங்கே முட்டையிட்டாய்?
கல்லுக் கிழப்பி கரையோரம் முட்டையிட்டேன்
......."

கல்லைத் திறந்து கருங்காட்டுப்பாறையிலும்,கல்லைப்பிளந்துஅல்லது குடைந்து கடலோரம் முட்டையிட்ட ஆக்காட்டி இங்கே கல்லைக் கிழப்பி கரையோரம் இடுகிறது.

இந்தப் பரவை நிலத்துக் காரைச் செடிகளைப் போலவே,காய்ந்து குன்றி நெக்கரித்த உப்பு நீர் வனப்பு இவர்களுடையது.இந்த மனிதர்களின் கவி சொல்லும் திறனை யாரும் எழுதியதாக நான் அறியவில்லை.சர்வசாதாரண மனிதர்களின் கவித்துவத்தைக் கண்டு நான் வியந்து,வியந்து.....அவர்கள் உதட்டின் அசைவையும்,ஒரு வரிக் ஹைகூவையும் எம்மால் இன்று அனுபவிக்க முடியாதபடி தொலைவும் இழப்பும்.



படிப்பகம்

இரண்டாம் உலகமகாயுத்தக் காலம்.சண்டைக்கு அஞ்சாத தன் தம்பியை யாரோ கொன்று விட்டார்கள்.ஒரு தமக்கையின் ஒப்பாரி:

"....
சண்டைக் களலியிலே
வேச மகன் சண்டாளி–என் பிறப்போடு
சதிராடி வெண்டானில்ல

போருக் களலியிலே
வேச மகன் சத்திராதி–என் பிறப்போடு
போராடி வெண்டானில்ல
....."

நீண்டு செல்லும் முடிவற்ற இந்த ஒப்பாரியைப் பாடியவளை தூவானக் கோடிக்குள் பாயிழைத்து,லொக்கு லொக்கு என்று பாக்கிடிக்கும் படுக்கைக் கிழவியாக,மாறாட்டக் கதைகளோடு பார்த்ததுண்டு.அவளோடு அந்த ஒப்பாரியும் மறைந்திருக்கக் கூடும்.இதை நான் இனி எங்கு தேடுவது!

"......
நீ
வில் எடுத்துத் தோளில் வைத்தால்
வீமர் படை வென்று விடும்
அம்பெடுத்துத் தோழில் வைத்தால்
ஐவர் படை வென்று விடும்
......"

இறந்த உறவினன் பலத்தை எம்பிராட்டி என்பவள் இப்படிப் பாடக்கேட்டதுண்டு.கண்ணும் மனமும் நீர் சிந்த வைக்கும் சோகச்சொற் கீதங்களை இயல்பாக இயற்றிவிடுகிறாள் இந்த மனுவி.

என் வீட்டு ஏழு பிள்ளை நல்லதங்காள் 'டக்' கென்று தோணியேறி நல்லதம்பியிடம் சென்று விடுவதற்கு –இந்து சமுத்திரத் தடை இவர்களுக்கு!

"மலையடி" என்பார்கள்.ஏழுதிசை நீரோட்டம் ஒன்றாகச் சந்தித்து அலையால் மலை எழுப்பும். அதற்குள் அகப்பட்ட கப்பல் எம்பிக் குதித்து "தொப்"பென்று கீழே விழும்.இதே அலைகளுக்குள் தான் அதோ வெட்டுண்ட முனுகும் உடல்களோடு 'குமுதினி' மௌன சமுத்திரத்தில் மிதந்த படி.

இங்கே பூதத் தம்பி விலாசப் பாடல்களை எல்லாம் கதை கதையாச் சொல்லும். "முட்டு முட்டு....என்று என் தலையோடு முட்டவரும் ஆசைக் கிழவர்களை எல்லாம் எரித்த சுடுகாடு கூட கடலோடு கரைகிறது.அடையாளங்கள் சீக்கிரமாகவே அழிந்து விடுகின்றன தடயங்களேயில்லாமல்.

அதனாற்றான் தமிழில் எது எழுதப்பட்டாலும்,எது சொல்லப்பட்டாலும் அதைக் கோவைப்படுத்துவதும்,பாதுகாப்பதும் நாளை வரை அவசியமாகிறது.

முன்பெல்லாம் இறந்தவன் சரித்திரத்தை கல்லில் வெட்டியிருப்பார்களோ! மையும் தாளும் புழக்கத்திற்கு வந்த பின்னால் இறந்தவர் மீது பாடப்படும் புலம்பல் திரட்டுக்கு இப்போதும் "கல்வெட்டு" என்றே வழங்கப்படுகிறது.

இதனைச் 'சரம கவிதை' என்று சற்றே பண்டிதத் தமிழில் சொல்லுவார் கவிமாமணி க.த.ஞானப்பிரகாசம்.இது வரை சுமார் 1400 கல்வெட்டுத் திரட்டுக்களை விருத்தப் பாக்களாக இயற்றியிருக்கும் இந்தக் கவிஞன் சமூகத்தொடர்பின் உள்ளார்ந்த பண்புகளைத் துன்பியல் நிகழ்வுக்குப் பின்னால் கணவன்,மனைவி,மக்கள்,மருமக்கள்,... என்ற உறவுகளாக நின்று வெளிப்படுத்தும் உணர்வுகள் எந்த இலக்கிய வரலாற்றில் இடம் பெறப்போகின்றன?

நாலு பேருக்குச் சொல்லிப் பெருமைப் படக் கூடியவாறு,பழைய மாணவர் சங்கம் அமைத்து ஒரு கூட்டம் போட இந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடங்கள் எதுவும் கொடுத்து வைக்கவில்லை.ஆனாலும்

www.padippakam.com

இங்குள்ள சமூக நிர்மாணிகளாக நிறையத் தமிழ் ஆசிரியர்கள் இருந்தார்கள்.கம்பன் வீட்டை இவர்கள் கட்டியபோதும்,கிராமீயத்தின் அழிவிலும்,அன்றாட வாழ்வின் சுறுசுறுப்பிலும் ....எங்கள் மனத்தின் அழிவோடு இவர்கள் கதையும்,எங்கள் கவிதையும் முடிந்து விடுகிறது.

"பங்கர்வாடி" என்றொரு மராட்டிய நாவல்.அற்புதமான அந்த நாவலில் ஓர் ஆசிரியன்.கிராமத்திற்கும் அவனுக்குமான பந்தம்,இலங்கையின் எந்தக் கிராமத்தோடும் இணைத்துப்பார்க்கக் கூடியதுதான்.அவன் போலவே நான் கண்ட கோசல்யாவின் மூத்த சகோதரன் தர்மலிங்கம் ஆசிரியர் அவர்களும்."கீழைத் தேயக் கல்விமுறை" என்ற பதிவைமட்டும் எம்முடன் விட்டுச் சென்றுள்ளார்.அவன் மீது பாடப்பட்டிருக்கும் இரங்கலைக் கண்ட போது அவனை வியந்த என் சின்னவ நாட்களை எண்ணிப்பார்க்கிறேன்.

இந்த அனைத்தோடும் உறவுடைய ஒருத்திதான் கோசல்யா.மரபின் பக்கமே இவள் நின்றிருந்திருந்தால் ஒருவேளை நல்ல மரபுக்கவிதைகள் நமக்குக் கிடைத்திருக்கக் கூடும்.விசாலித்த,நுனித்த பார்வை;படிமங்களிற் பயிற்சி;எதுகை மோனைக்கல்லாது உணர்வு தெறிக்கும், செதுக்கிய சொற்தேர்வு என்றெல்லாம் இவள் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.எழுதியதெல்லாம் கவிதைகள் தானா என்ற மீள்பார்வை;சுருங்கச் சொல்லல் என்பதெல்லாம் எமது ஆக்கதாரர்கள் கவனிக்கவேண்டும்.எமது எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் அற்பவிடயங்கள் என்று ஒதுக்கப்பட்டு விடும் பெண்கள் எதிர் கொள்ளும் பல விடயங்களை இவள் பாடு பொருள் ஆக்கியிருப்பது கண்டு கொள்ளப்பட வேண்டியது.

தன் கவிதைகளைத் தொகுப்பாக்கியிருக்கும் இவளது முயற்சி இன்னும் பலபேர் இத்துறைக்குள் வருவதற்குத் துணிச்சலைத் தருமென்று நம்புகின்றேன்.தேடலும் விமர்சனமும் என்றும் தேவைப்படுவது!

பேர்லின்,ஜெர்மனி

ந.சுசீந்திரன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



எழுத்தாளராகவும், விமர்சகராகவும், நேர்முக வர்ணனையாளராகவும், தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியராகவும், பொதுச் சேவையில் ஈடுபாடுடையவராகவும், கவியரங்குகளில் பங்கு பற்றுபவராகவும், ஜேர்மன் ஒபகௌசன்-முல்கைம் நகரங்களில் வாழுகின்ற தமிழ்மக்களுக்கான தமிழ் ஒலிபரப்பு நிகழ்ச்சி அறிவிப்பாளர்களில் ஒருவராகவும் சமூகத்துக்கான தனது பங்களிப்பைச் செய்துகொண்டிருப்பவர் திருமதி கோசல்யா சொர்ணலிங்கம்.

கா.க. முருகதாசன்

பெண்களின் பிரச்சனைகளைப்பற்றி அக்கறைபடுவதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. இந்த அகதிவாழ்வில் நாம் தொலைத்து விட்டவை எத்தனையோ! அதில் ஒன்று மனிதநேயம் என்றும் சுட்டிக் காட்டுகிறார். பல்வேறு கூறுகளாய்ப் பிளவுபட்டு, வேறுபாடுகளையே பற்றிப் பிடித்து வாழ்ந்து வரும் எம்மவர் மத்தியில் நட்பு, அன்பு புரிந்துணர்வைத் தேடும் தாலாய் இவர் கவிதைகள் ஒலிக்கின்றன.

தேவிகா.
கோலோன் பெண்கள் வட்டம்

திருமதி கோசல்யாவுடன் எனக்கு நீண்ட காலப் பழக்கமுண்டு. மிக இளம் வயதிலேயே கவிதை எழுத வேண்டும் என்ற துடிப்பு அவரது உள்ளத்தை ஆட்கொண்டு விட்டதை நானறிவேன். தனது தளராத முயற்சியினால் முன்னணிக் கவிஞர் வரிசைக்கு அவர் வந்துகொண்டிருப்பதை இத் தொகுதியிலுள்ள பல கவிதைகள் கட்டியங் கூறி நின்றன.

சந்திரலேகா வாமதேவன் B.A (Hons).M.A.

படிப்பகம்